(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 395.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஒற்றோபர் 09, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2670/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உவர் நீர் மீன்பிடித்துறையை முன்னேற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) உவர் நீர் மீனவ சமுதாயத்திற்கு மீன்பிடி உபகரணங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி பணத்தொகையானத கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(vi) ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி பணத்தொகை போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3246/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கைப் புகையிரதத் திணைக்களம் தொடர்பில்,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்காக எதிர்வுகூறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றுள்ளவாறு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் எவ்வளவு என்பதையும்;

(iv) நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அங்கு பணியாளர்கள் தேவைக்கு அதிகமாகவா அல்லது குறைவாகவா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபம் ஆகியன எவ்வளவு என்பதையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலக்கடன், நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றின் மொத்தம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3713/ '13

3.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்திற்குக் கிடைத்துள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சனாதிபதி நிதியத்தினால் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறை ரீதியாக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சனாதிபதி நிதியத்தினால் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவி வழங்குவதற்காக ஆட்களைத் தெரிவு செய்கின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் பிரதேச சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினர்களுக்காக மருத்துவ சிகிச்சைகளுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3961/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்தியாவின் பட்டியாலா பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் 2013.02.24 முதல் 2013.02.28 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆறாவது தெற்காசிய பல்கலைக்கழக கலாசார விழாவில் பங்கேற்ற அழகியற் கலை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய குழு மிகத் திறமையான குழுவாகவும் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகவும் தெரிவு செய்யப்பட்டதாக இந்நாட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன என்பதையும்;

(ii) எனினும், மேற்படி விழாவின் போது கலாசார அம்சங்கள் சமர்ப்பிக்கப்பட்டதேயன்றி போட்டிகள் இடம்பெறவில்லை என்பதையும்;

(iii) மேற்படி விழாவில் பங்கேற்றமைக்கான சான்றிதழ் ஒன்றை மாத்திரம் பெற்றுக்கொண்ட இக்குழுவை முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட குழுவாகக் காட்டி கௌரவ உயர் கல்வி அமைச்சர் உள்ளிட்ட கல்விமான்களை அழைத்து பெருந்தொகையான பணத்தை செலவிட்டு போலியான பாராட்டு விழாவொன்று நடாத்தப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி மோசடியான செயல் அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் திரு. ஜயசேன கோட்டேகொடவினால் தனது புதல்வரான திரு. ஜானக கோட்டகொடகேவிற்காக மேற்கொள்ளப்பட்டதென மேற்படி பல்கலைக்கழகத்தின் கட்புலக் கலைகள் பீடத்தின் மாணவர் சங்கத்தின் செயலாளர் குற்றம்சாட்டுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி மோசடிச் செயல் சம்பந்தமாக முறைசார்ந்ததொரு விசாரணையை நடாத்தி தவறாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4419/ '13

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மகாவலி அதிகாரசபையின் வலவ விசேட ஆளுகைப் பிரதேசத்தின் கீழ் காணப்படுகின்ற, எம்பிலிபிட்டிய கடதாசித் தொழிற்சாலைக்கு சொந்தமான சுமார் 500 ஏக்கர் காணியில் உள்ள,

(i) உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டடங்கள் ஆகியன தற்போது பாவனைக்கு எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(iii) காணிகளிலுள்ள மரங்களையும் மரங்களின் பகுதிகளையும் வெட்டி ஏற்றிச் செல்லப்படுதல் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) காணிகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பதற்காக ஏதேனுமொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4636/ '13

6.

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 வரவுசெலவு திட்டத்தின் மூலம் கமக்காரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் வயது 63 வரை நீடிக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தில் 60 வயதில் கமக்காரர் ஓய்வூதியம் வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், அது 63 வயது வரை நீடிக்கப்பட்டமையினால் அச்சட்டம் மீறப்படுதல் நடைபெறுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறின்றேல், 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு நவம்பர் வரை தவணைக் கட்டணத்தை செலுத்தி ஓய்வூதியத்திற்கான தகைமையை பெற்றவர்களுக்கு நிலுவை ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கமக்காரர் ஓய்வூதியத்திற்கான பங்களிப்பு 18 வயது முதல் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கமக்காரர் ஓய்வூதியத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சு, கொவி செத லொத்தர் மற்றும் விவசாயிகளின் பங்களிப்பு வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4733/ ’14

7\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்விச் சேவை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்கு துணிகள் வழங்க வேண்டியதாக இருந்த பெண் மற்றும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்தினதும் பாடசாலை சீருடைகள் அதாவது, வெள்ளை கவுன், வெள்ளை சேர்ட் மற்றும் காற் சட்டை, சிறு மாணவர்களுக்கான நீல நிற காற் சட்டை ஆகியவற்றுக்குத் தேவையான துணிகளின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி சீருடைகளுக்குத் தேவையான துணிகள் கொள்வனவு செய்யப்பட்ட முறை யாதென்பதையும்;

(ii) இது சம்பந்தமாக கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒவ்வொரு கேள்விப் பத்திர விண்ணப்பதாரரின் பெயர், முன்வைத்துள்ள விலைகள் மற்றும் துணி வகைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றினால் முன்வைக்கப்பட்ட துணி வகைகள் உரிய விவரக்கூற்றுகளுக்கு அமைவானவையா என பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி குழுவின் பரிந்துரைக்கேற்ப வழங்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(vi) நாடு பூராகவுமுள்ள அரச பாடசாலைகளின் அனைத்து பிள்ளைகளுக்கும் சமமான முறையில் சீருடைத் துணிகள் கிடைக்கின்றதா என்பதை பின்ஆய்வு செய்தலோ அல்லது இறுதி அறிக்கை தயாரித்தலோ நடைபெறுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4762/ ’14

8\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பால் கிராமம் வேலைத் திட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) குருணாகல் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) திரவப் பாலை பிரபல்யப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட விற்பனை நிலையங்களின் செயற்பாடு தொடர்பான பின்னாய்வு செயற்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4816/ '14

9.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு, பிரதம அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பிரபுக்களின் பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கான தகைமைப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்ற வயதெல்லைகள் யாதென்பதையும்;

(ii) மேற்படி வயதெல்லைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தகைமைப் பரீட்சைக் காலப்பகுதிக்குள் உயிரிழந்துள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தகைமைப் பரீட்சைக் காலப்பகுதிக்குள் நோய்வாய்ப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4847/ '14

10.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் சூதாட்ட வியாபாரத்தை மேற்கொள்வதற்கு இது வரைக்கும் விநியோகிக்கப்பட்டள்ள உரிமங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்கள் மற்றும், அல்லது கம்பனிகளின் பெயர்களையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒவ்வொன்றும் வழங்கப்பட்ட திகதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4944/ '14

11.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இணைச் சுகாதாரம் என்றழைக்கப்படுகின்ற தாதி மற்றும் உதவி மருத்துவச் சேவைகள் பட்டப் பாடநெறிக்குரிய காலஎல்லை யாது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பட்டப் பாடநெறியைக் கற்கின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பட்டப் பாடநெறிக்கு, வருடாந்தம் அனுமதிக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நான்கு வருட பட்டப் பாடநெறியொன்றாக திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பாடவிதானம் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி பட்டப் பாடநெறியின் காலஎல்லை தற்போது மூன்று வருடங்கள் வரை குறைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நான்கு வருட பாடநெறியாக பாடவிதானம் தயாரிக்கப்பட்டிருந்த மேற்படி பட்டப் பாடநெறியை மூன்று வருடங்களில் நிறைவு செய்யும் ஆற்றல் உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பட்டப் பாடநெறியின் கற்கைக் காலஎல்லை குறைக்கப்பட்டதன் காரணமாக குறித்த மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4959/ ’14

12.

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் வென்னப்புவ பஸ் டிப்போவில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது இந்த டிப்போவினால் நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது இந்த டிப்போவில் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இந்த பஸ் டிப்போவில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவர்களின் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தேவைப்படும் பணத் தொகை யாது என்பதையும்;

(vi) இந்த பஸ் டிப்போவின் மாதாந்த இலாபம் அல்லது நட்டம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5031/ ’14

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தில் கடமையாற்றும் விலங்கு மருத்துவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மேற்படி திணைக்களத்தில் விலங்கு மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் உள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் தற்போது காச நோயினால் பீடிக்கப்பட்டுள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான போதியளவு வசதிகள் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் காணப்படுகின்றதா;

(iv) காசநோயினால் பீடிக்கப்பட்ட யானைகளிடமிருந்து மிருகக்காட்சி சாலையில் உள்ள ஏனைய விலங்குகளுக்கு இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பின்னவலை யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி யானைகளுக்கு மத்தியில் காச நோயினால் பீடிக்கப்பட்ட யானைகள் இருப்பதாக அறியவந்துள்ளதா;

(iii) பின்னவலை யானைகளை காச நோயிலிருந்து பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5171/ '14

14\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பரீட்சைகளில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விடையளிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஆங்கில மொழியில் மட்டும் வினாத்தாள்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தீர்மானத்திற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்மானத்திற்கு நீதி அமைச்சரின் இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3317/ '12

15\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011.05.31ஆம் திகதியில் இருந்து இற்றைவரை இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையுடன் உடன்படிக்கைகளைக் கோரிய மற்றும் மேற்கொண்ட அரச தொழில் முயற்சிகள் மற்றும் கம்பனிகளின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும் பிரிவு அடிப்படையிலும்;

(ii) மேலே (அ) (i) இல் சொல்லப்பட்டவற்றில் இற்றைவரை வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(iii) மேலே (அ) (i) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே சொல்லப்பட்ட கம்பனிகள் அனுபவித்த வரி விடுமுறைகளையும்;

(ii) 2010.01.01 முதல் 2012.12.31 வரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மற்றும் தொழிற்பாடுகளை ஆரம்பித்த கம்பனிகளின் எண்ணிக்கையை ஆண்டுவாரியாகவும் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டப் பிரிவின் பிரகாரமும்

வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1\.

கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

2\.

கௌரவ சில்வேஸ்திரி அலன்ரின்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சந்திரகுமார் சமூகமேம்பாட்டு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற் கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆவது பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 செத்தெம்பர் 05 ஆம் திகதிய 1878/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.09.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

மாநகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 10.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2014 மே 19 ஆம் திகதிய 1863/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதார அமைச்சர்,— அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2011,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2014.01.21 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான அரச மருந்தகக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.04.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 23.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 25.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 26.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 27.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 28.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.22 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 29.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபைச் சட்டத்தின் 29(5) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 30.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை-2011,— 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அணுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 34(2) ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 31.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.23 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 32.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை-2011,— 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுடனான இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

* 33.

தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை-2011,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் தயாரிக்கப்பட்டு 2013.10.10 ஆம் திகதி சமார்ப்பிக்கப்பட்டதான, 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக் களுடனான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிற்நுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது)

34.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

ஜம்மிய்யத்துல் ஸஹ்வா அல் - கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---